# பொருளாதார மறுசீரமைப்புச் சுட்டி

## முடிவுகளின் சாராம்சம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் | சோஷல் இண்டிகேட்டர்
FRIEDRICH NAUMANN FOUNDATION FOR FREEDOM

செப்டம்பர் 2023

# அறிமுகம்

இலங்கையின் வரலாற்றில் அறியப்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் (IMF) இடையில் சுமார் ஒரு வருட காலம் நீடித்த இருதரப்பு கலந்துரையாடலின் பின்னர், இரு தரப்பினரும் ஒரு உடன்பாட்டை எட்டினர். அதன் செயற்படுத்தலின் ஒரு பகுதியாக, சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கையின் ஆளுகை தொடர்பில் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட கற்கைகளின் அடிப்படையில் அடையப்பெற்ற கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதுடன், மார்ச் 2023 இல் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதல் தவணைக் கொடுப்பனவாக 2.9 பில்லியன் அமெரிக்க டாலர் கடன் வசதியை இலங்கை பெற்றது. இந்தப் பின்னணியில், தற்போதைய பொருளாதாரம் மற்றும் கடந்த சில மாதங்களாக தொடங்கப்பட்ட அல்லது விவாதிக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து பொதுமக்களின் அபிப்பிராயங்களை அறியும் நோக்கில் நாடளாவிய ரீதியிலான பொருளாதார மறுசீரமைப்புச் சுட்டி ஆய்வின் இரண்டாவது அலையின் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது.

இந்தக் கணக்கெடுப்பு ஆய்வானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணக்கெடுப்பாய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் நடாத்தப்பட்டது. சோஷல் இன்டிகேட்டரானது, 1999ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பரந்த அளவிலான சமூக - அரசியல் பிரச்சினைகள் குறித்து அபிப்பிராய ஆய்வுகளை நடாத்தி வருகிறது. இந்த ஆய்வானது கலாநிதி பிரதீப் பீரிஸ், மா. கிருஷ்ணமூர்த்தி, இஷாரா ஜயரத்ன மற்றும் நிஷாரா கருணாதிலக ஆகியோரை உள்ளடக்கிய குழுவினால் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்வை நடாத்த ஆதரவளித்த கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து (CPA) மற்றும் திரு. Wolfgang Heinze மற்றும் Friedrich Naumann Foundation for Freedom (FNF) இலங்கையின் குழுவினருக்கு அவர்கள் அளித்த ஆதரவிற்கு சோஷல் இன்டிகேட்டரானது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# முறைமையியல்

பொருளாதார மறுசீரமைப்புச் சுட்டி இரண்டாவது அலை ஆய்வானது, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி நான்கு பிரதான இன சமூகங்களைச் சேர்ந்த (சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) 1000 பதிலளிப்பவர்களைக் கொண்ட மாதிரியுடன் மேற்கொள்ளப்பட்டது. மாதிரியானது நாட்டின் 25 மாவட்டங்களிலும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்குகின்றது. வெளிக்களப்பணியில் மொத்தம் 77 வெளிக்கள ஆய்வாளர்கள் (ஆண் மற்றும் பெண்) பங்கேற்றனர். பல கட்டங்களில் எழுமாற்றைக் கொண்ட அடுக்கு மாதிரி நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரியின் இடம் தெரிவு செய்யப்பட்டது. மேலும் பதிலளிப்பவர்கள் எழுமாற்று மாதிரி தெரிவு நுட்பத்தை பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்டனர். வெளிக்கள ஆய்வானது 2023 ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. சனத்தொகையின் உண்மையான மாவட்டம் மற்றும் இன விகிதாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் தரவுத்தொகுப்பானது மதிப்பேற்றப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் தொகுப்பை (SPSS) பயன்படுத்தி தரவுத்தொகுப்பு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# ஆய்வு முடிவுகளின் சாராம்சம்

### ஒரு வருடத்திற்கு முன்னருடன் ஒப்பிடுகையில் பொருளாதார நிலைமை

- ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலையுடன் ஒப்பிடும் போது தமது தற்போதைய பொருளாதார நிலைமை மோசமடைந்துள்ளதாக தெரிவிக்கின்ற இலங்கையர்களின் சதவீதம், 2022 ஒக்டோபரில் 79% ஆக இருந்து 2023 ஆகஸ்டில் 62% ஆக குறைந்துள்ளது.
- நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களை ஒப்பிடும் போது, நகர்ப்புறங்களைச் சேர்ந்த அதி பெரும்பான்மையான சதவீதத்தினரும் (81%) கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களில் 58% ஆனவர்களும் பொருளாதார சிரமத்தை அனுபவிப்பதாக தெரிவிக்கின்றனர்.

### எதிர்கால பொருளாதார நிலை தொடர்பான அபிப்பிராயங்கள்

- எதிர்கால பொருளாதாரம் குறித்து கருத்து தெரிவிக்கையில், இலங்கையின் நான்கில் ஒரு பகுதியினர் இன்னும் ஒரு வருட காலத்திற்குள் தமது பொருளாதார நிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படாது என நம்புகின்ற அதே வேளையில், ஐந்தில் இருவர் தமது பொருளாதார நிலைமை மோசமடையும் என்ற அவநம்பிக்கையைத் தெரிவிக்கின்றனர்.
- 30 மற்றும் அதற்கு மேற்பட்ட வயது வரம்பில் உள்ளவர்களை விட இளைஞர் யுவதிகள் பொருளாதார நிலைமை குறித்து சற்று அதிக நம்பிக்கையுடன் உள்ளனர்.
- ஒரு வருடத்திற்குள் தமது பொருளாதாரம் மோசமான நிலையை அடையும் என நம்பும் இலங்கையர்களின் சதவீதமானது, கிராமப்புறங்களை (38%) விட நகர்ப்புறங்களில் (46%) அதிகமாக உள்ளது.

### சர்வதேச நாணய நிதியத்தின் உதவி பற்றிய அபிப்பிராயம்

- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உதவி தொடர்பாக மக்கள் வேறுபட்ட அபிப்பிராயங்களை வெளிப்படுத்துகின்றனர். இலங்கையர்களில் 46% இனர் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியானது இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள உதவியாக இருக்கும் என்று நம்புகின்றனர். அதே நேரத்தில், அதே அளவான சதவீதத்தினர் நம்பிக்கையின்மையைத் தெரிவித்திருக்கின்றனர்.
- IMF உதவியானது தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க உதவியாக அமையும் என்ற நம்பிக்கை பெரியவர்களுடன் (30 வயதுக்கு மேற்பட்டவர்கள்) ஒப்பிடும்போது, இளைஞர் யுவதிகளிடையே (18-29 வயது) சற்று அதிகமாக காணப்படுகின்றது.

**பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சர்வதேச உதவி**

- இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளில், பெரும்பான்மையான (38%) இலங்கையர்கள் சீனாவை முதலாவதாக தெரிவுசெய்துள்ளனர். அடுத்ததாக தெரிவு செய்யப்பட்ட நாடுகளாக இந்தியா (22%) மற்றும் ஜப்பான் (18%) ஆகும்.

**பொருளாதார மறுசீரமைப்புகள் தொடர்பில் பணியாற்றுகின்றவர்கள் மீதான நம்பிக்கை**

- தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்த்து வைப்பார் என ஏறக்குறைய 42% இலங்கையர்கள் நம்புகின்ற அதேவேளையில், அரைவாசி இலங்கையர்கள் அவ்வாறான நம்பிக்கை இல்லை என்றும் தெரிவிக்கின்றனர்.
- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கை தொடர்பில் பெரியவர்கள் (30 வயதுக்கு மேற்பட்டவர்கள்) மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு (18-29 வயது) இடையில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடு காணப்படவில்லை.
- தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது தொடர்பில் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கான திறமை மத்திய வங்கியின் ஆளுனர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிற்கு உண்டு என, இலங்கையர்களில் ஏறக்குறைய 42% இனர் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்ற அதே வேளையில், 38% இலங்கையர்கள் அவ்வாறு உணரவில்லை என்று தெரிவிக்கின்றனர்.
- பெரியவர்கள் (30 வயதுக்கு மேல்) மற்றும் இளைஞர் யுவதிகள் (18-29 வயது) இடையே நம்பிக்கை மற்றும் நம்பிக்கையின்மை என்பவற்றின் சதவீதம் கிட்டத்தட்ட சமமாகப் பகிர்ந்து காணப்படுகின்றது.

**பொதுமக்களின் செலவு செய்வதற்கான இயலுமை**

- அதி பெரும்பான்மையான இலங்கையர்கள் உணவு, மின்சாரம், சுகாதாரம், பிள்ளைகளின் கல்வி மற்றும் ஓய்வுநேர நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு செலவிடுவதில் சிரமங்கள் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.
- செலவு செய்யும் இயலுமை தொடர்பில் கேட்கப்பட்ட போது, குறிப்பிடத்தக்க வகையில், 83% இலங்கையர்கள் உணவுக்காக செலவழிப்பதில் சிரமம் இருப்பதாக கூறுகின்றனர். அதே வேளையில், சுகாதாரம் (87%), கல்வி (90%), மின்சாரம் (93%) மற்றும் ஓய்வு நேர நடவடிக்கைகள் (94%) போன்றவற்றிற்கு செலவழிப்பதில் சிரமம் இருப்பதாகத் தெரிவிக்கும் சதவீதம் அதிகரிக்கின்றது.

## நாட்டை விட்டு வெளியேறுவதற்கான விருப்பம்

- இலங்கையர்களில் 68% இனர் தங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டால், இலங்கையை விட்டு வெளியேறி வேறொரு நாட்டில் வாழ விருப்புவதாக தெரிவிக்கின்றனர். இந்த விருப்பமானது 2022 ஒக்டோபர் மாதம் (57%) உடன் ஒப்பிடும்போது சிறிதளவு அதிகரித்து உள்ளது.
- பெரியவர்கள் (30 வயதுக்கு மேற்பட்டவர்கள்) மற்றும் இளைஞர் யுவதிகள் (18-29 வயது) ஆகிய இருசாராரிடமும் புலம் பெயர்வதற்கான விருப்பத்தின் அதிகரிப்பைக் காணமுடிகின்றது.
- இளைஞர் யுவதிகளிடையே (18-29 வயது) புலம்பெயர்வதற்கான விருப்பம் 2022 ஒக்டோபர் மாதத்தில் 77% ஆக இருந்து 2023 ஆகஸ்ட் மாதத்தில் 82% ஆக உயர்ந்துள்ளது, மேலும் பெரியவர்களிடையே (30 வயதுக்கு மேற்பட்டவர்கள்) 45% இருந்து 59% வரையிலான அதிகரிப்பைக் காணமுடிகின்றது.

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டம் (DDO) தொடர்பாக அறிந்துள்ளமை மற்றும் அபிப்பிராயங்கள்

- குறிப்பிடத்தக்கவகையில், இலங்கையர்களில் 30% இனர் மட்டுமே உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தைப் (DDO) பற்றி அறிந்துள்ளனர். 70% இனர் அறிந்திருக்கவில்லை.
- உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தைப் (DDO) பற்றி தாங்கள் அறிந்துள்ளோம் என்று கூறும் இலங்கையர்களில் 70% இனர், IMF நிர்ணயித்த இலக்கை அடைவதற்கு DDO வேலைத்திட்டம் நாட்டிற்கு அவசியம் என்பதை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை, DDO திட்டம் வெளிநாட்டுக் கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகளை சற்று இலகுபடுத்தலாம் என்பதை 63% இனர் ஏற்றுக்கொள்கின்றார்கள். சுமார் 60% இனர் DDO திட்டம் ஓய்வூதியம் பெறுபவர்களை விகிதாசாரமற்ற வகையில் பாதிக்கும் என்றும் EPF மற்றும் ETF மீது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் என்றும் நம்புகின்றார்கள்.
- DDO பற்றி அறிந்திருக்காதவர்களில் 62% இனர், தற்போதைய பொருளாதார நெருக்கடியை தீர்க்க DDO அவசியம் என்று அரசாங்கம் கூறுகின்றதன் அடிப்படையில் DDO இற்கு அனுமதி அளிக்கின்றனர்,

## அஸ்வெசும திட்டம் தொடர்பில் அறிந்துள்ளமை மற்றும் அபிப்பிராயங்கள்

- அதி பெரும்பான்மையானவர்கள் அஸ்வெசும திட்டம் தொடர்பாக அறிந்திருக்கின்றார்கள். அறிந்திருக்கும் அளவு நகர்ப்புறங்களுடன் (76%) ஒப்பிடும்போது கிராமப்புறங்களில் (85%) சற்று அதிகமாகவே உள்ளது.
- அஸ்வெசும திட்டம் தொடர்பாக அறிந்துவைத்துள்ள இலங்கையர்களில், 68% இனர் அஸ்வெசுமவின் பயனாளிகளின் தேர்வு முறை பாரபட்சமற்றதும் நியாயமானதும் அல்ல என்று கருதுகின்றனர்

- அஸ்வெசும திட்டம் தொடர்பாக அறிந்துவைத்துள்ளவர்களில் அரைவாசியினர், வறுமை நிலையில் உள்ள மக்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள இந்த திட்டமானது உதவியாக அமையும் என்று கருத்து தெரிவிக்கின்றனர். அதே வேளை சம அளவான சதவிகிதத்தினர் அதற்கு எதிரான கருத்தைக் கொண்டுள்ளனர்.

## ஊழல் எதிர்ப்பு சட்டம் தொடர்பாக அறிந்துள்ளமை மற்றும் அபிப்பிராயங்கள்

- பெரும்பான்மையான மக்கள் (70%) இனர், 2023 ஜூலை மாதம் 19 ஆம் திகதி அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டம் பற்றி அறிந்திருக்கவில்லை. இந்த அறிந்திராத நிலை பெரியவர்கள் (30 வயதுக்கு மேற்பட்டவர்கள்) மற்றும் இளைஞர் யுவதிகள் (18-29 வயது) இடையே சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.
- ஊழல் எதிர்ப்பு சட்டம் பற்றி அறிந்திருக்கும் இலங்கையர்களில், பெரும்பான்மையானவர்கள் (56%) இந்தச் சட்டம் ஊழலைக் குறைப்பதில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று நம்புகின்றனர். இந்தக் கருத்தை பெரியவர்கள் (30 வயதுக்கு மேல்) 60% மற்றும் இளைஞர் யுவதிகள் (18-29 வயது) 50% பகிர்ந்து கொள்கின்றார்கள்.

## தாராளவாத பொருளாதாரக் கொள்கை முன்மொழிவுகள் மீதான அணுகுமுறை

- தாராளவாத பொருளாதாரக் கொள்கை முன்மொழிவுகள் தொடர்பிலான ஆய்வு முடிவுகளின்படி, 54% இலங்கையர்கள் வியாபாரத்தின் அதிகரிப்பு அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பதால் வெளிநாட்டுக் கம்பனிகள் எமது நாட்டில் முதலீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். அதேவேளை, வியாபாரங்களை நடாத்துவது அரசிற்கு பொறுப்பான விடயமல்ல என்பதால் அரச நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்படல் வேண்டும் என்று 33% இனர் கருத்து தெரிவிக்கின்றனர். தனிநபரின் வருமானம் ஈட்டும் திறனை அரசாங்கம் கட்டுப்படுத்தக்கூடாது என்று சுமார் 70% இனர் கருத்து தெரிவிக்கின்றனர். 2022 ஒக்டோபர் மாதம் உடன் ஒப்பிடும்போது, இந்தக் கருத்துக்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படவில்லை.

## நலன்புரிக் கொள்கை முன்மொழிவுகள் மீதான பொதுமக்களின் அபிப்பிராயம்

- நலன்புரிக் கொள்கைகள் தொடர்பில் பார்க்கும் போது, அரசாங்க செலவினங்களைக் குறைக்க அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்று மக்கள் தொகையின் அரைவாசியினர் எண்ணுகின்றனர்
- 2022 ஒக்டோபர் மாதத்திலும் இதே சதவீதமான இலங்கையர்கள் இந்தக் கருத்தைக் கொண்டிருந்தனர். இருப்பினும், 64% ஆனவர்கள் தங்கள் மக்களைக் கவனிப்பதும், நலன்புரித் திட்டங்களுக்குச் செலவிடுவதும் அரசாங்கத்தின் பொறுப்பு என்று நம்புகிறார்கள். குறிப்பிடத்தக்க வகையில், 2022 ஒக்டோபர் மாதத்தில் 56% ஆக இருந்த இந்த நம்பிக்கை இவ்வருடம் ஆகையில் அதிகரித்துள்ளது.

FRIEDRICH NAUMANN FOUNDATION ஜெர்மனியில் 1958 ஆம் ஆண்டு ஜெர்மனி குடியரசின் முதல் ஜனாதிபதி தியோடர் ஹியூஸால் நிறுவப்பட்டது. இந்த அறக்கட்டளையானது ஜெர்மனியிலும் வெளிநாட்டிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் மற்றும் சமூகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் சுதந்திரம் என்ற கொள்கையை செல்லுபடியாக்கும் இலக்கை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எங்கள் பணிக்கு ஜேர்மன் பாராளுமன்றம் மத்திய பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைச்சகம், வெளியுறவு அலுவலகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் மூலம் நிதியளிக்கிறது. சுதந்திரத்திற்கான ப்ரீட்ரிக் நௌமன் அறக்கட்டளை உலகம் முழுவதும் 60 நாடுகளில் செயல்படுகிறது. தெற்காசியாவில், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கையில் FNF அலுவலகங்கள் உள்ளன. கூடுதலாக FNF நேபாளம், பூட்டான் மற்றும் மாலைத்தீவில் உள்ள பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படுகிறது. சுதந்திரத்திற்கான எமது அறக்கட்டளை இலங்கையுடனான தொடர்பு ஐந்து தசாப்தங்கள் பழமையானது. 1968 முதல் 2013 வரையிலான காலகட்டத்தில், மற்றும் 2016 இல் அதன் பணியை மீண்டும் தொடங்கும் போது, அறக்கட்டளையின் பணி சுதந்திரம் மற்றும் பொறுப்பின் முக்கிய மதிப்புகளில் கவனம் செலுத்துகிறது.

FRIEDRICH NAUMANN FOUNDATION For Freedom.
Sri Lanka

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, கட்சி சார்பற்ற அமைப்பாகும், இது முதன்மையாக ஆளுகை மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. பொதுக் கொள்கை விவாதத்தில் சிவில் சமூகத்தின் முக்கிய பங்களிப்பை வலுப்படுத்த வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையில் 1996 இல் உருவாக்கப்பட்டது, CPA பொதுக் கொள்கை விமர்சிக்கப்படும், மாற்று வழிகள் அடையாளம் காணப்பட்டு பரப்பப்படும் ஆராய்ச்சி மற்றும் வாதிடும் திட்டங்களுக்கு உறுதிபூண்டுள்ளது.

Address: 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka
Telephone: +94 (11) 2081384-6
Fax: +94 (11) 2081388
Web: https://www.cpalanka.org

CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

25 YEARS 1996 - 2021
CENTRE FOR POLICY ALTERNATIVES

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) ஆய்வுப் பிரிவாகும். இது 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறுவப்பட்டது, இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளில் நிரந்தர, தொழில்முறை மற்றும் சுயாதீனமான வாக்களிப்பு வசதிக்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்புகிறது. வாக்குப்பதிவு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையால் உந்தப்பட்டு, SI அதன் தொடக்கத்தில் இருந்தே பல சமூக-பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளில் கருத்துக் கணிப்புக்களை நடத்தி வருகிறது

Address: 6/1B, 1/1, Layards Road, Colombo 05
Telephone: +94 112 584 050
Web: https://cpalanka.org/survey-research/
Email: krishna@cpasocialindicator.org

Making Social Research Count